**புதுச்சேரி அரசு**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை**
**புதுச்சேரி**
****

**தேதி: 05-05-2026**

## விளம்பரம்

இந்திய அரசின் உயரிய விருதான **பத்ம விருதுகள்** 1954ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு பத்மவிபூஷன், பத்மபூஷன், பத்மஸ்ரீ என மூன்று வகைகளில் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு திருநாளன்று நடுவண் அரசினால் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கலை, இலக்கியம், கல்வி, விளையாட்டு, மருத்துவம், சமூக சேவை, அறிவியல் மற்றும் பொறியியல், பொது நலன், குடிமைப் பணி, வணிக மற்றும் தொழில் ஆகிய துறைகளில் ஏதேனும் ஒன்றில் செய்யப்பட்ட தனித்துவமான சாதனைகள் / பணிகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது, சாதி, தொழில், தகுதி அல்லது பால் இனம் ஆகியவற்றில் வேறுபாடின்றி அனைத்து தரப்பினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவர்கள், விஞ்ஞானிகள் தவிர்த்து மற்ற அரசு ஊழியர்கள், பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் **பத்ம விருதுகளுக்கு** விண்ணப்பிக்க தகுதியானவர்கள் அல்ல.

**2027** - ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று அறிவிக்கப்படவுள்ள **பத்ம** விருதிற்கான தகுதியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விவரக் குறிப்புக்கள் (Nominations) உரிய படிவத்தில் கூடுதல் விவரங்கள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மற்றும் விளம்பரத்துறை, 18, பெல்காம் வீதி, பாண்டிச்சேரி- 605 001 அவர்களுக்கு **30-06-2026** அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அலுவலக நேரத்திற்குள் கிடைக்குமாறு சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பிராந்தியங்கள் உள்ளடக்கிய புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். மேலும், உரிய படிவத்தினை https://py.gov.in என்ற இணைய தளங்களிலிருந்து பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் இவ்விருதிற்கென புதுச்சேரி அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு நடுவண் அரசுக்கு இணைய வழி மூலம் பரிந்துரை செய்யப்படுவர்.

**இயக்குநர்**
**செய்தி மற்றும்**
**விளம்பரத்துறை**